**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

**CC.NO.27 /2022 LW- 6 PW-6**

| | |
|---|---|
| Name | அண்ணாமலை |
| Husband/Father Name | தேவராஜ் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | உதவி ஆய்வாளர், ஆற்காடு நகர காவல் நிலையம். |
| Age | 35 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 24.02.2026 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆற்காடு நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 09.03.2022 அன்று ராணிப்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது ராணிப்பேட்டை காவல் நிலை சிறப்பு உதவி ஆய்வாளர் இருசப்பன் என்பவரால் பதிவு செய்யப்பட்ட குற்ற 126/2022 என்ற வழக்கில் எனது பார்வைக்கு வைத்ததை நான் தொடர் புலன் விசாரணை மேற்க்கொண்டு விசாரணை செய்ததில் ஏற்கனவே விசாரித்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. இருசப்பன் என்பவரிடம் தெரிவித்த சங்கதிகளையே என்னிடம் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் எனவும் பதிவு செய்யவில்லை. மேலும் இவ்வழக்கில் புகார்தாரரான பூமணி என்பவரை 13.03.2022 அன்று விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்தேன். அவ்வாக்குமூலத்தின் அடிப்படையில் சட்ட பிரிவுகள் **294(பி), 323, 355 இதச** பிரிவை மாற்றம் செய்து **294(பி), 323, 355 r/w 4 of TNPHW Act** ன் படி பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் இவ்வழக்கின் தலை மறைவான எதிரிகள் ஜெயசுதா மற்றும் கொல்லாபுரி ஆகியோர்கள் நீதிமன்ற முன்பிணையில் சென்றதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. எனவே இத்துடன் எனது 18.03.2022 அன்று **294(பி), 323, 355 r/w 4 of TNPHW Act** இதசன் படி நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சிறப்பு உதவி ஆய்வாளர் மேற்படி வழக்கினை அவரது விசாரணையை விசாரித்து முடித்து மேல் விசாரணைக்கு எனது பார்வைக்கு வழக்கு கோப்புகளை எந்த தேதியில் வைக்கப்பட்டது என்றால் 09.03.2022 அன்றைய தினமே எனது பார்வைக்கு வைத்து விட்டார். நான் எத்தனை நாட்கள் கழித்து **அ.சா.1** ஐ மறு விசாரணை செய்தேன் என்றால் 12.03.2022 அன்று விசாரணை செய்தேன். எனது விசாரணையின் போது 05.03.2022 சம்பவம் நடந்தது என்றும், 09.03.2022 அன்றுதான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த 5 நாட்கள் காலதாமதத்தை எனது விசாரணையின் போது கூறவில்லை என்றால் சரிதான்.

சம்பவத்தை **அ.சா.1** ன் மகள் கைபேசியில் பதிவு செய்ததாகவோ, அதை பதிவிறக்கம் செய்து புகாருடன் இணைத்து கொடுத்ததாகவோ கூறியுள்ளாரா என்றால் இல்லை. ஆனால் எனது விசாரணையின் போது சி.டி போட்டுல்லதாக குறிப்பிட்டு உதவி ஆய்வாளர் விசாரணையின்போது அது கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் அந்த சிடியை சம்பவயிடத்தில் கைப்பாற்றமல் அம்மூர் ஆலமரம் கைப்பற்றியுள்ளார் என்றால்

சரிதான். **அ.சா.1ன்** மகள் வீடியோ எடுத்ததாக கூறியுள்ளார். ஆனால் அந்த மகளின் விவரத்தை குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. சி.டி எங்கு வாங்கி எந்த கடையில் பதிவிறக்கம் செய்யப்பட்டது என்று சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. எனது மறு விசாரணையில் நான் சி.டி எங்கு வாங்கி எந்த கடையில் பதிவிறக்கம் செய்யப்பட்டது தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை.

இவ்வழக்கில் விசாரணை செய்த நாங்கள் சம்பவத்தை வீடியோ எடுத்ததாக கூறப்படும் கைப்பேசியை கைப்பற்றி இவ்வழக்கில் வழக்கு சொத்தாக சேர்க்கப்பட்டதா என்றால் இல்லை. நான் எனது இறுதி அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பு **அ.சா.1** னிடமிருந்து கைப்பற்றப்பட்ட சி.டியில் என்ன இருந்தது என்று பார்த்து அதன் அடிப்படையில் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. **அ.சா.1** கொடுத்த புகாரிலும், உதவி ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்திலும், என்னிடம் கொடுத்த மறுவாக்குமூலத்திலும் கொடுத்த சங்கதிகள் வெவ்வேறா உள்ளது என்றால் சரிதான்.

**அ.சா1** கூறியது போல் எதரிகள் **அ.சா. 1** யை காயப்படுத்தவில்லை என்றாலும **அ.சா.1** தான் எதிரிகளை அசிங்கமாக பேசி எதிரிகள் அவர் மீது புகார் அளித்துவிடுவார் என்பதற்காக இந்த பொய் புகார் அளித்தார் என்றால் சரியல்ல. தாக்கல் செய்யப்பட்டுள்ள சி.டி இந்த வழக்கை மிகைப்படுத்த வேண்டி தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

Digitally signed by SADASIVAM POORNIMA
DN: cn=SADASIVAM POORNIMA, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.